# C.S.I TAMIL CHURCH - OMAN


# “பாலைவன மன்னா”




மன்னா – 9 அக்டோபர் 2019 பிரதி – 7



# ஆயர் மடல்



வாழ்வு தருபவரும் வழிநடத்துகிறவருமான இயேசு கிறிஸ்துவின் இனியத் திருப்பெயரில் வாழ்த்துக்கள்.

அக்டோபர் மாதத்தை ஆண்டவரின் கரங்களில் இனிதாய் பெற்றுள்ளோம். செப்டம்பர் மாதத்தின் முப்பது நாட்களையும் ஆண்டவர் பாதுகாப்பாயும் பராமரித்தும் வழிநடத்தினார். நன்றி சொல்வோம்.

**அறுவடை பண்டிகை:-** அறுவடை திருநாள் சிறப்புத் தொழுகையையும், விற்பனை விழாவையும் கண்டுகளித்தோம். நாம் அனைவரும் ஒருமித்த மனதோடு கலந்துகொண்டு சிறப்பித்தோம் என்பதே இதன் முத்தாய்ப்பான மகிழ்ச்சி. பண்டிகைகளும், கொண்டாட்டங்களும் நம்மை திருச்சபையில் ஒன்றிணைக்கின்றன. ஒருமித்து ஆண்டவரை தொழுதுகொள்ளத் தூண்டுகின்றன என்பதே அடிப்படை என்பதை உணர்ந்துகொண்டோம்.

**ஆற்றலாய் செயல்படுவோம்:-** அக்டோபர் மாதத்தில் ஆலயத்தில் நடைபெறும் அனைத்து நிகழ்வுகளுக்காகவும் ஜெபிப்பதோடு ஆற்றலாய் செயல்பட அன்போடு அழைக்கிறேன். குறிப்பாக 5-ம் தேதி நடைபெறும் திருமறைப்பள்ளி தியானமுகாம், 25-ம் தேதி நடைபெறும் அகில உலக திருமறைப்பள்ளி சிறப்புத் தொழுகைகள் மற்றும் அனைத்து நிகழ்வுகளிலும் உற்சாகமாய் பங்களிப்பு செய்து ஆற்றலாய் செயல்பட அன்புடன் அழைக்கிறேன்.

**அர்ப்பணித்து ஜெபிப்போம்:-** இந்திய தேசத்தின் பொருளாதார நெருக்கடிகள் குறித்து அன்றாடம் தொலைத்தொடர்பு சாதனங்கள் மூலம் அறிகிறோம். மக்கள் வாழ்வுநிலை சீரடையவும், அரசின் சட்டதிட்டங்கள் மக்களை பாதிக்காதிருக்கவும், ஏழை எளிய மக்களின் வாழ்வாதாரங்கள் பெருகவும் இறைஅருள் வேண்டி அர்ப்பணத்தோடு ஜெபிக்க அன்பாய் கேட்கிறேன்.

ஆண்டவரின் அருளாசி உங்கள் அனைவரையும் ஆட்கொண்டு வழிநடத்துவதாக!

**அன்புடன் போதகர்,**
**Rev. Dr. N. ஜெசின்**

# ஆயர் அருளுரை

## உண்மை வழி நடப்போம்

ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் இனிய திருப்பெயரில் வாழ்த்துக்கள்.

**“இதோ உள்ளத்தில் உண்மையிருக்க விரும்புகிறீர். அந்தக்கரணத்தில் ஞானத்தை எனக்குத் தெரியப்படுத்துவீர்” (சங்கீதம் 51:6).**




உண்மையற்ற உலகில் வாழும் நம்மை உண்மையாயிருக்க ஆண்டவர் அழைக்கிறார். நமக்கு பொதுவாக ஒரு கேள்வி எழுவது உண்டு. அவன் உண்மையாயிருக்கவில்லை, இவன் உண்மையாயிருக்கவில்லை, அவனை விட நான் பரவாயில்லை என நமக்கு நாமே திருப்திப்பட்டுக் கொள்ளுகிறோம். ஆனால் நம்முடைய உண்மை நம்மை உயர்த்துவதோடு நாம் சேவிக்கும் ஆண்டவருக்கு மகிமைத் தேடித்தரும்.

ஒரு ஞாயிற்றுக்கிழமை சபையில் போதகர் இந்த வசனத்தைவைத்து போதித்தார். நாம் உள்ளத்தில் உண்மையாயிருக்கவேண்டும், எந்த காரியத்திலும் கர்த்தருக்கு முன்பாக உண்மையாயிருக்க பிரயாசப்படவேண்டும் என்று பிரசங்கித்தார். அதைக் கேட்டுக்கொண்டிருந்த ஒருவர் வீட்டிற்கு சென்றார். அடுத்தநாள் அவர் ஒரு ஷாப்பிங் மாலிற்கு சென்று பொருட்களை வாங்கி வந்து காரில் ஏற்றிக்கொண்டிருந்தபோது, பொருட்கள் வாங்கி வந்த வண்டியின் கீழே ஒரு பெட்டியில் இருந்த பொருளுக்கு பணம் செலுத்தவில்லை என்ற ஞாபகம் வந்தது. பொருட்களை எடுத்து வைத்தபோது அதை மறந்து கொண்டுவந்தபடியால், அதற்கு பணம் செலுத்தவில்லை.

திரும்பபோய் கியூவில் நின்று பணம் செலுத்தினால் நேரமாகிவிடும் என்று பணம் செலுத்தாமலே சென்றுவிட்டார். அன்று இரவு படுத்திருக்கும்போது, ஆவியானவர் ஞாயிற்றுகிழமை போதகர் சொன்ன வார்த்தைகளை நினைவுப்படுத்தினார். அடுத்தநாள் அவர் காலையில் எழுந்து புறப்பட்டு, அந்த கடைக்கு சென்று அந்த பெட்டியை காட்டி, பணத்தை கட்டினார். அங்கு வேலைசெய்த பெண் அதைப் பார்த்து வியந்தவர்களாக, நீங்கள் எத்தனை உண்மையுள்ளவர்களாக இருக்கிறீர்கள், நீங்கள் கிறிஸ்தவரா? என்று கேட்டார். அதைக்கேட்ட அந்த சகோதரன் கர்த்தரை மகிமைப்படுத்தினார். கர்த்தர் நம்மிடத்தில் எதிர்பார்ப்பது இத்தகைய தன்மையே.

### வார்த்தையில் உண்மை:-

பொய் உதடுகள் கர்த்தருக்கு அருவருப்பானவைகள். உண்மையாய் நடக்கிறவர்களோ அவருக்குப் பிரியம் (நீதி. 12:22).

கர்த்தருக்குப் பிரியமாய் இருக்கவேண்டும் என்பதில் மனிதன் உறுதியாய் இருக்கவேண்டும். உண்மை ஒரு மனிதனின் வாழ்வில் முதலாவதாக உதட்டிலிருந்து துவங்குகிறது. உதடுகள் வழியாய் நாம் பேசுகின்றவை, உறுதிப்பாடு செய்கின்றவை, வார்த்தைகள் வழியாய் நாம் தீர்மானிக்கின்றவை இவை யாவும் நம்மை உண்மையுள்ளவனா? என்று காட்டிக்கொடுக்கிறது.

புலிவருகிறது என்று பொய்யாய் பலமுறை கத்திய ஒரு மனிதன் உண்மையாகவே புலிவந்து கத்தியபோது ஒருவரும் உதவிக்கு வரவில்லை. அவன் ஆபத்தில் மாட்டிக்கொண்டான் என்பது ஒரு பழைய கதை. ஆனால் அதில் உள்ள உண்மை இன்றும் புதிதாகவே உள்ளது. நமது வாயின் வார்த்தைகளே நம் வாழ்வைத் தீர்மானிக்கிறது என்பது உண்மை.

சிலர் எளிதாக எதற்கு எடுத்தாலும் பொய் பேசுவர், புரளி பேசுவர், புரட்டி பேசுவர், இல்லாததும் பொல்லாததும் பேசுவர். ஆனால் அது அவர்களையே மற்றவர்களுக்குத் தரமற்றவர் அல்லது பொய்யானவர் என்று ஒருநாள் காட்டிக்கொடுத்துவிடும். எனவே அருவருப்பான பொய் உதடுகளையும், அதன் பொய் வார்த்தைகளையும் களைந்து உண்மையாய் வாழ முயலுவோம்.

## வாழ்வில் உண்மை:-

உண்மை வாழ்வு உலகில் ஆசிகளைப் பெற்றுத்தரும் என்பது உலக வாழ்வின் உண்மை. இதை உணர்ந்த சாலோமன் நீதிமொழிகள் 28:20-ல் கூறும்போது, ‘‘உண்மையுள்ள மனுஷன் பரிபூரண ஆசீர்வாதங்களைப் பெறுவான்’’ என்று குறிப்பிடுகிறார்.

திருமறையில் உண்மையுள்ள மனிதனாய் இருந்து பரிபூரண ஆசீர்வாதங்களைப்பெற்ற மனிதர்களில் மோசே, யோசேப்பு, தானியேல், சாத்ராக், மேஷாக், ஆபெத்நேகோ போன்றவர்கள் முக்கியமானவர்கள். தானியேலைக் குறித்து திருமறை கூறும்போது,

‘‘தானியேல் உண்மையுள்ளவனாயிருந்தபடியால் அவன்மேல் சுமத்த யாதொரு குற்றமும், குறைவும் காணப்படவில்லை’’.

இப்படி குற்றமில்லாத உண்மையுள்ள மனிதனாய் இருந்ததினால் வந்த துன்பங்களுக்கு எல்லாம் அவரை விடுவித்த கர்த்தராகிய தேவன் அவனை உயர்த்தினார். தானியேல் 6:28-ல் ‘‘தானியேலின் காரியம் ஜெயமாயிருந்தது’’ என்று காணமுடிகிறது. அதுபோல சாத்ராக், மேஷாக், ஆபெத்நேகோவையும் கர்த்தர் பெரிய இடத்திற்கு உயர்த்தினாரல்லவா. காரணம் அவர்களிடத்தில் காணப்பட்ட உண்மையே! நம் வாழ்வில், நம் வேலைகளில் உண்மையாக இருப்போம். கர்த்தர் ஏற்ற வேளையில் நிச்சயமாக உயர்த்துவார். நம்

குடும்பத்தில், நம் சபைகளில், நம் நண்பர்களிடத்தில் நம் பேச்சில், நம் செயல்களில், நம் சிந்தனைகளில் எதிலும் உண்மையாக இருப்போம். கர்த்தருடைய பரிபூரண ஆசீர்வாதத்தைப் பெறுவோம்.

**வானவரில் உண்மை:-**

வார்த்தையாய் இம்மண்ணில் வந்த வானவர் இயேசு கிறிஸ்து தன்னை இம்மண்ணிற்கு வெளிப்படுத்தும்போது நானே வழி, வாய்மை, வாழ்வு என்கிறார். வழியும், சத்தியமும், ஜீவனுமாய் இருக்கிறேன் என்ற ஆண்டவர் “உண்மை நானே” என்கிறார். உலகிற்கு உண்மையாய் இருக்கிறேன். யோவான் 8:32-ல் “சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்கிறார்” இயேசு கிறிஸ்து. சத்தியமாகிய கிறிஸ்துவை அறிவதும் அவர் மூலம் விடுதலைபெறுவதும் ஆண்டவர் விரும்பும் ஒன்று.

இந்த வெளிப்பாட்டை உணர்ந்து உண்மையுள்ளவர்களாய் வாழ அழைக்கப்பட்டிருக்கிறோம் என்பது உண்மை. ஆண்டவர் நமது உண்மைத் தன்மையை காண்கிறார். தாலந்து உவமையின் இறுதியில் மத்தேயு நற்செய்தி நூல் 25:23-ல் “உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய். அநேகத்தின்மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன். உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி” என்று கர்த்தரிடம் (எஜமானிடம்) உண்மையாயிருந்தவனை பரலோக வாழ்வுக்கு அனுமதிப்பதுபோன்ற அழைப்பு வருகிறது. “ஆவியோடும், உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ளவேண்டும்” (யோவான் 4:23) என்ற அழைப்பும் வருகிறது.

வானவர் இயேசுவில் இணைந்து, உண்மையுள்ளவர்களாய் வாழ்ந்து பரிபூரண ஆசீர்வாதம் பெற்றுவாழ ஆண்டவர் துணைபுரிவாராக. ஆமென்!

**அன்புடன் போதகர்,**
**Rev. Dr. N. ஜெசின்**

## வாழ்த்துகிறோம்



நமது திருச்சபை பணிகளில் பல நிலைகளில் உதவி செய்துவந்த முன்னாள் டீக்கனார் திரு. தன்ராஜ் அவர்கள் பணிநிறைவு செய்து தாயகம் திரும்புகிறார்கள். அவர்கள் ஓய்வுகாலம் இறை ஆசியோடு குடும்பமாய் மனநிறைவோடு வாழ திருச்சபை சார்பில் அன்போடு வாழ்த்துகிறோம்.

**இவண்,**
**சபைபோதகர், சபைக்குழு மற்றும் சபைமக்கள்**

# சிறுகதை

## யார் முதலாளி?

ஒரு மிகப்பெரிய நிறுவனத்தின் முதலாளிக்கு வயதாகி விட்டதால் அவர்தம் நிறுவனத்தின் பொறுப்பை அவரிடம் வேலைசெய்யும் ஒரு திறமையானவரிடம், நேர்மையானவரிடம், உண்மையாளரிடம் ஒப்படைக்க முடிவு செய்தார்.

எல்லா ஊழியர்களையும் தன் அறைக்கு வருமாறு கட்டளையிட்டார். முதலாளி பேச ஆரம்பித்தார். அன்புள்ள ஊழியர்களே! என்னுடைய ஓய்வுக்குப்பின் உங்களில் ஒருவர்தான் என்னுடைய இந்த நிறுவனத்தின் பொறுப்பை ஏற்கவேண்டும். அதனால் உங்களுக்கு நான் ஒரு போட்டி வைக்கப்போகிறேன். யார் வெற்றியடைகின்றார்களோ, அவர்தான் நம் நிறுவனத்தின் அடுத்த மேலாளர் என்றார். இப்போது என் கையில் பலதரப்பட்ட, பல வகைகளை சார்ந்த ஏராளமான விதைகள் இருக்கின்றன. யாருக்கு எந்த விதை வரும் என எனக்கே தெரியாது. இதை உங்களிடம் ஆளுக்கு ஒன்றாகக் கொடுப்பேன். இதை நீங்கள் உங்கள் வீட்டில் ஒரு தொட்டியில் நட்டு, உரம் இட்டு, தண்ணீர் ஊற்றி, நன்றாக வளர்த்து அடுத்த மாதம் இதே நாளில் என்னிடம் எடுத்துவந்து காட்டவேண்டும். யாருடைய செடி நன்றாக, உயரமாக, போஷாக்காக வளர்ந்து இருக்கிறதோ, அவரே என் கம்பெனியின் பொறுப்பை ஏற்கவேண்டும் என்றார். அனைவரும் ஆளுக்கு ஒரு விதை வாங்கி சென்றனர்.



அந்த கம்பெனியில் வேலைசெய்யும் பாபுவுக்கும் ஒரு விதை கிடைத்தது. அவர் ஆர்வத்துடன் அதை வாங்கி சென்றார். தன் மனைவியிடம்போய் முதலாளி சொன்ன அனைத்தையும் அப்படியே சொன்னார். அவன் மனைவி தொட்டியும், உரமும், தண்ணீரும் எடுத்து அவருக்கு கொடுத்து அந்த விதையை நடுவதற்கு உதவி செய்தாள்.

ஒரு வாரம் கழிந்தது. நிறுவனத்தில் இருக்கும் அனைவரும் தங்கள் தொட்டியில் செடி வளர ஆரம்பித்துவிட்டது என்று பேசிக்கொள்ள ஆரம்பித்தனர். ஆனால் பாபுவின் தொட்டியில் செடி இன்னும் வளரவே ஆரம்பிக்கவில்லை. ஒரு வாரம் ஆனது ம்ஹூம் செடி வளரவே இல்லை. நான் விதையை வீணாக்கிவிட்டேனா? என்று எண்ண ஆரம்பித்தார். ஆனால் தினந்தோறும் செடிக்கு தண்ணீர் ஊற்றுவதை மட்டும் நிறுத்தவே இல்லை. தன் தொட்டியில் செடி வளரவில்லை என்று அலுவலகத்தில் யாரிடமும் அவர் சொல்லவும் இல்லை. ஒரு மாதம் முடிந்துவிட்டது. எல்லாரும் தொட்டிகளை முதலாளியிடம் காட்டுவதற்காக எடுத்து வந்தார்கள். பாபு தன் மனைவியிடம் காலி தொட்டியை நான் எடுத்துப்போக மாட்டேன்,

எனக்கு வெட்கமாக இருக்கிறது என்று சொன்னார். அவர் மனைவி அவரை சமாதானப்படுத்தி சொன்னார் நீங்கள் ஒரு மாதம் முழுக்க உங்கள் முதலாளி சொன்ன மாதிரிதானே செய்தீர்கள். செடி வளராததற்கு நீங்கள் வருந்த வேண்டியதில்லை அதற்கு நீங்கள் காரணமும் அல்ல. நேர்மையாக நடந்துகொள்ளுங்கள். தொட்டியை எடுத்துச்சென்று முதலாளியிடம் காட்டுங்கள் என்றாள். பாபுவும் காலிதொட்டியை அலுவலகத்திற்கு எடுத்து சென்றார். எல்லாரும் தொட்டிகளை அவர் கண்முன்னே கொண்டு சென்றார்கள். விதவிதமான செடிகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு உயரத்தில் இருந்தன. பல்வேறுவிதமான பூக்கள் அவைகளில் பூத்துக் குலுங்கின. பாபுவின் தொட்டியை பார்த்த அனைவரும் சிரிக்க ஆரம்பித்தனர்.

முதலாளி எல்லாரையும் தன்னுடைய அறைக்கு வருமாறு அழைத்தார். எல்லாருடைய செடியையும் பார்வை இட்டார். அருமை! எல்லாரும் செம்மையாக செடியை வளர்த்து உள்ளீர்கள். உங்களில் யாரோ ஒருவர்தான் இன்று பொறுப்பு ஏற்றுக்கொள்ளப் போகின்றீர்கள் என்றார். பாபு கடைசியில் நின்றிருந்தார். அவரை அருகே வருமாறு அழைத்தார். முதலாளி தன்னை வேலையைவிட்டு நீக்கத்தான் கூப்பிடுகிறார் என்று எண்ணி பயந்துகொண்டே சென்றார் பாபு. முதலாளி பாபுவிடம் உங்கள் செடி எங்கே? என்று கேட்டார். ஒரு மாதமாக அந்த விதையை நட்டு உரமிட்டு தண்ணீர் விட்டதை விலாவாரியாக எடுத்துச்சொன்னார் பாபு. முதலாளி பாபுவைத்தவிர அனைவரையும் உட்காருமாறு கூறினார். பிறகு பாபுவின் தோளில் கையைப் போட்டுக்கொண்டு நமது கம்பெனியின் நிர்வாகத்தை ஏற்று நடத்தப்போகிறவர் இவர்தான் என்றார். பாபுவுக்கு ஒரே அதிர்ச்சி. தன் தொட்டியில் செடி வளரவே இல்லையே! பிறகு ஏன் நமக்கு இந்த பொறுப்பை கொடுக்கிறார்? என்று குழம்பிப்போனார். முதலாளி பேச ஆரம்பித்தார். சென்ற மாதம் நான் உங்களிடம், ஆளுக்கு ஒரு விதை கொடுத்து வளர்க்க சொன்னேன் அல்லவா? அது அனைத்தும் அவிக்கப்பட்ட விதைகள் (Boiled Seeds). அவை அனைத்துமே முளைக்கும் தன்மையை இழந்துவிட்டது. நீங்கள் அனைவரும் நான் கொடுத்த விதை முளைக்காததால் அதற்கு பதில் வேறுஒரு விதையை நட்டு வளர்த்துக்கொண்டு வந்திருக்கின்றீர்கள். பாபு மட்டுமே நேர்மையாக நடந்துகொண்டார். ஆகவே அவரே என் நிறுவனத்தை நிர்வகிக்க தகுதியானவர் என்றார்.

நாம் சொல்லும் சொல், நாம் பயணிக்கும் பாதை, நேர்மையாக இருந்தால் மட்டும் போதும், வெற்றிகள் நம்மைத் தேடி ஓடி வரும். வாழ்க்கையில் நேர்மையாக இருக்க முயல்வதும் ஒரு போராட்டம்தான். அதில் வெற்றிப்பெறுவதுதான் உண்மையான வெற்றி.

**அன்புடன் போதகர்**

# பெண்கள் பகுதி

## உண்மையே உறுதியான அஸ்திபாரம்

**தேவனுடைய உறுதியான அஸ்திபாரம் நிலைத்திருக்கிறது – (2தீமோ. 2:10).**




ஐரோப்பா தேசமொன்றிலே மிகப்பெரிய கட்டிடம் ஒன்று நவீன நாகரீகமான முறையில் கட்டப்பட்டு வெகு நேர்த்தியாக காணப்பட்டது. ஆனால் அது யாருக்கும் உபயோகமில்லாமல் அரசாங்கத்தினால் முத்திரைப் போடப்பட்டிருந்தது. காரணம் என்னவென்றால் அவ்வீட்டைக்கட்டி எழுப்ப ஆரம்பிக்கும்போது ஒருவர் வாங்கின லஞ்சத்தின் விளைவாக மிகவும் மோசமாக அஸ்திபாரம் போட்டுவிட்டார்கள். அஸ்திபாரம் உறுதியானதா என்று கவனிக்காத எஞ்ஜினியர்கள் அதின்மேல் மிக வேகமாக கட்டிடத்தை கட்டி எழுப்பினார்கள். ஆனால் சில நாட்களுக்குள்ளேயே கட்டிடம் ஆட்டம் கண்டது. இதற்கு காரணம் அதைப் பொறுப்பெடுத்து செய்தவர்களுக்கு உத்தம குணம் இல்லை. தங்களது உண்மைத் தன்மையை லஞ்சத்திற்கு விற்றுவிட்டார்கள். எவ்வளவு பணம் செலவழித்தும் என்ன பயன்? எல்லாம் வீணானது.

### குடும்பத்தில் உண்மை:-

குடும்ப உறவுகளைக் கட்டியெழுப்புவதற்கு சரியான அஸ்திபாரம் தேவை. ஒரு கிறிஸ்தவக் குடும்பத்தின் அஸ்திபாரம் கொலோசெயர் 3:18-20 வரை உள்ள வசனங்களில் அடங்கியுள்ளது. அவைகள் கணவன் மனைவியிடம் அன்புகூருவதும், மனைவி கணவனுக்கு கீழ்ப்படிவதும், பிள்ளைகள் பெற்றோருக்குக் கீழ்ப்படிவதும் மற்றும் பெற்றோர் பிள்ளைகளைக் கோபமூட்டாதிருப்பதும் ஆகும்.

குடும்பத் தலைவன் தேவையில்லாத காரியத்திற்கு அதிகமாய் கோபப்படுவது, ஆணவமாய் நடந்துகொள்வது, அளவுக்கதிகமாய் அதிகாரம் செலுத்துவது போன்றவை குடும்பக் கட்டுமானத்தைக் கெடுக்கும். பணத்தை குடியிலும், வெறியிலும், புகைப்பதிலும், சீட்டாட்டத்திலும் தேவையற்ற நண்பர்களைச் சேர்த்துக்கொண்டு செலவழிப்பதிலும் இருந்தால் அந்தக் குடும்பம் எப்படி முன்னுக்கு வரமுடியும்? கணவன் மற்றப் பெண்களிடத்தில் அல்ல, மனைவியிடத்தில் அன்புக்கூரும்படியாக வேதம் நமக்குப் போதிக்கிறது.

அதுபோல மனைவி குடும்பத்தின் அதிகாரிபோல நடக்கிற வீடுகள் உண்டு. குறிப்பாக கணவனை விட கூடுதல் சம்பளம் வாங்கும்போது அப்பிரச்சனை ஏற்பட வாய்ப்புகள் அதிகம். வேதத்தின்படி கணவனே குடும்பத்தின் தலையாக இருக்கவேண்டும். கணவனுக்கு கீழ்ப்படிந்தவளாக மனைவி காணப்படவேண்டும். நான் வைத்ததுதான் சட்டம் என்றும், பேஸ்புக் போன்ற சமூக வலைதளங்களில் அறிமுகம் இல்லாத ஆண்களோடு மணிக்கணக்கில் பேசுவதும் குடும்ப உறவை முறிக்கிற காரியங்கள். கணவனுக்கு விருப்பமில்லாத காரியங்களில் மனைவி ஒருபோதும் ஈடுபடக்கூடாது. இல்லாத பட்சத்தில் குடும்பத்தின் அஸ்திபாரம் ஆட்டம் காணும்.

**குறை நீக்கும் உண்மை:-**

பிள்ளைகளை கீழ்ப்படிய சிறுவயது முதல் பயிற்றுவிக்கவேண்டும். தேவையானால் வசனத்தின்படி பிரம்பையும் பயன்படுத்தக்கூடிய உறுதி பெற்றோருக்குத் தேவை. மற்றவர்கள் பிள்ளைகளைக் குறித்து குறைகளை சொல்லும்போது, என் பிள்ளை அப்படித்தான் இருப்பான், உன் பிள்ளைகளை நீ பார்த்துக்கொள் என்கிற அநாவசியமான வார்த்தைகளைக் கொட்டக்கூடாது. அந்த தவறு பிள்ளையிடம் இருக்கிறதா என்றுப் பார்த்து அதைத் திருத்த முயற்சிக்கவேண்டும். ஏதோ நம் பிள்ளைகள் வானத்தில் இருந்து வந்த தேவதூதர்களைபோல நினைத்து அவர்களை சத்தம் போடவே பயப்படுகிற பெற்றோர் இருக்கிறவரை பிள்ளைகள் கெட்டுப்போக சந்தர்ப்பங்கள் அதிகம் உண்டு. பிள்ளைகளை கண்டிக்கிற அதே நேரத்தில் அன்பும் செலுத்தவேண்டும்.

பிரியமானவர்களே! வேதவசனத்தின்படி அமைக்கப்படும் குடும்பம் உறுதியாக அஸ்திபாரம் போட்ட வீட்டைப் போன்றது. அவ்வப்போது சிறு சிறு சண்டைகள் வரலாம். ஆனால் வீடோ அசையாது. கணவன், மனைவி, பிள்ளைகள் இவர்களுக்கு தேவன் கொடுக்கும் இந்த எளிய ஆலோசனைகளை கைக்கொள்ளுவோம்.

வேத வசனத்தினால் அஸ்திபாரம் போடப்பட்ட கிறிஸ்துவையே, நம் குடும்பத்தின் அஸ்திபாரமாக வைத்துக் கட்டுவோம். அந்த வீடு அசையாததாக, உறுதியானதாக என்றென்றும் நிலைத்திருக்கிறதாக இருக்கும். ஆமென் அல்லேலூயா!

**அன்புடன் பெண்கள் சங்க தலைவி,**
**திருமதி D. ஷர்மிளா ஜெசின்**

## சுவிசேஷத் தீபமாய் மாறுவோம்




**மண்ணில்** : 29-09-1901
**விண்ணில்** : 18-08-1944
**ஊர்** : **ஹவிங்வா**
**நாடு** : **சீனா**
**தரிசன பூமி** : **சீனா**

“மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்தினாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன?”

இந்த வேத வசனம் ஜான் சுங்கின் வாழ்க்கைக்கு மிகவும் பிரயோஜனமாக அமைந்தது. யார் இந்த ஜான் சுங்? சீன மெதடிஸ்ட் ஊழியரின் மகனாகப் பிறந்தார். சிறுவயதிலேயே மிகுந்த அறிவாளியாக காணப்பட்ட இவர், அறிவியல் துறையில் அதிகம் நாட்டம் கொண்டார். அமெரிக்காவிற்குச் சென்று அத்துறையில் டாக்டர் பட்டம் பெற்றார். கல்வியிலே அவர் உயர்ந்த நிலையை அடைந்திருந்தாலும், மனதிலே நிம்மதியற்றவராவும், குழப்பங்கள் நிறைந்தவராகவும் வாழ்ந்து வந்தார்.

ஓர்நாள் மேற்கண்ட வேதவசனம் அவரோடு பேச ஆரம்பித்தது. ஆண்டவரின் அழைப்பிற்கு அடிபணிய ஆரம்பித்தார். வேதாகம கல்லூரியில் சேர்ந்தார். எனினும் அக்கல்லூரியின் போதனைகள் அவருக்கு உற்சாகத்தை அளிக்காத நிலையில், தனிமையில் இறைவனோடு உறவாட ஆரம்பித்தார். வேதாகமத்தைப் படிக்க படிக்க, அவர் உள்ளத்தில் பெரும் மாற்றம் ஏற்பட்டது. பரிசுத்த ஆவியானவர் அவரோடு இடைப்பட்டார். ஜான் சுங் பெற்ற ஆனந்தத்திற்கு அளவேயில்லை.

தான் பெற்ற மகிழ்ச்சியை, நண்பர்களிடம் வந்துகூற, அவர்களோ இவரைப் பைத்தியம் பிடித்தவர் என்று எண்ணினர். ஜான்சுங்கின் கொளுந்துவிட்டு எரியும் சுவிசேஷ வாஞ்சையை அறியாத அக்கல்லூரி நிர்வாகம் இவரை ஒரு அறையில் தள்ளி கதவை மூடியது. 193 நாட்கள் அவ்வறையிலேயே அடைபட்டுக் கிடந்தார். இந்நாட்களில் வேதாகமம் ஒன்றே அவர் துணையாக காணப்பட்டது. 40 முறை வேதாகமத்தை மீண்டும் மீண்டும் படித்தார். அங்கிருந்து விடுதலை கிடைக்கவே சீனாவை நோக்கி பயணம் மேற்கொண்டார்.

தான் படித்த பட்டங்களுக்கான சான்றிதழ்களை, கடலில் வீசி எறிந்தார். சீனாவின் கடைமுனைக்குச் சென்று 15 வருடங்கள் மிஷனெரியாக பணியாற்றினார். ஆயிரமாயிரம் மக்களின் ஆத்மீக வீரராக மாறினார். அதிகாலை ஜெபத்தில் அதிசயங்களைக் கண்ட இவர் தனது 43-ஆம் வயதில் இவ்வுலக ஓட்டத்தை முடித்து இறைவனில் இணைந்தார்.

(**நன்றி**: 365 மிஷனெரிகளின் வரலாறு)

# பாடலின் பின்னணியம்

## கர்த்தரின் பந்தியில் வா

**பாடல் : மரியான் உபதேசியார்** **ராகம் : மரியான் உபதேசியார்**

**பல்லவி**



கர்த்தரின் பந்தியில் வா, சகோதரா
கர்த்தரின் பந்தியில் வா

**அனுபல்லவி**

கர்த்தர் அன்பாய்ச் சொந்த ரத்தத்தைச் சிந்தின
காரணத்தை மனப் பூரணமாய் எண்ணிக் - கர்த்

**சரணங்கள்**



1. ஆபேலின் ரத்தம் அல்ல, - நீ செய்த
அநியாயத்தைச் சொல்ல,
சாபம் எல்லாம் வெல்ல, - சிந்துண்ட
தயையை நான் என்ன சொல்ல?
கோபம் இல்லாமல் உன் மா பாவம் தீர்த்திடக்
கூறிப் பிதாவின் முன் ஏறின ரத்தமே.

மரியான் உபதேசியார் எளிய வாழ்வை மேற்கொண்டவர். பார்ப்பவர்கள் அவரை ஓர் “ஏழை பரதேசி” என எண்ணுமளவிற்கு, தாழ்மை கோலம் கொண்டவர். ஆண்டவருக்காக உற்சாகமாகப் பல இடங்களில் பணியாற்றினார். பல இனிய பாடல்களை, அவர் தன் உள்ளத்தில் எழுந்த உணர்ச்சி ததும்ப எழுதினார்.

கடந்த நூற்றாண்டில் நெல்லை மாவட்டத்தில் வாழ்ந்த மரியான் உபதேசியார், கொடிய தொழுநோயால் பீடிக்கப்பட்டார். எனினும் ஆண்டவர் பேரில் அவர் கொண்டிருந்த நம்பிக்கை, சிறிதும் குறைந்து போகவில்லை. தொடர்ந்து நற்செய்திப் பணிகளை, உற்சாகமாய்ச் செய்து வந்தார்.

ஒருமுறை அவர் பணியாற்றிய திருச்சபையின் மூப்பர் ஒருவர், அவருடன் ஒத்துழைக்க மறுத்தார். மாறாக அவருக்கு எதிரான நடவடிக்கைகளிலும் ஈடுபட்டார். அதனால், திருச்சபையின் வழிபாட்டில் கலந்து கொள்வதையும் நிறுத்தி விட்டார். இதை அறிந்து துயருற்ற மரியான் உபதேசியார், ஒரு ஞாயிற்று கிழமை அவருடைய வீட்டிற்குச் சென்றார். அவரைத் திருவிருந்து ஆராதனையில் கலந்து கொள்ளுமாறு, வருந்தி அழைத்தார். அந்நிலையில் அவர் உள்ளத்தில் எழுந்ததே இப்பாடல். இந்த அருமையான பாடலை மரியான் உருக்கமாக பாடினார். அதை கேட்ட அந்த மூப்பர், உடனே மனம் மாறி, மன்னிப்புக் கேட்டு, அந்நாளின் நற்கருணை ஆராதனையில் கலந்து கொண்டார்.

"சுந்தர பரம தேவ மைந்தன்" போன்ற பல துதிப் பாடல்களையும் மரியான் உபதேசியார் இயற்றியிருக்கிறார். "கிறிஸ்துவுக்குள் அனைவரும் சகோதரர்; எனவே, திருச்சபையில் சாதி வேற்றுமை பாராட்டுவது தவறு," என்று ஆணித்தரமாய் எடுத்துக் கூறினார். அவர் வாழ்ந்த காலத்தில், பரவலாக நிலவிய இச்சீர்க்கெட்ட பழக்கத்தைக் கடிந்து, சமுதாயச் சீர்த்திருத்தவாதியாக விளங்கினார்.

இயேசுவின் மந்தையில் சேராத மற்றவர்களும், அவரது தியாக அன்பை அறிய வேண்டுமென மரியான் விரும்பினார். எனவே அவர், நற்செய்தி பணியில் துரிதமாக ஈடுபட்டார். தாம் பணியாற்றிய சிற்றூரில் ஓர் ஆலயம் கட்ட தீவிர முயற்சி எடுத்தார். அதனால் கிறிஸ்தவரல்லாத மற்றோரின் பலத்த எதிர்ப்புக்குள்ளானார். ஒருமுறை அவர்கள் அவரைக் கொலைச்செய்ய முயன்றபோது, மரியான் தமது நண்பரின் வீட்டுப் பரணியில் ஒளிந்துகொண்டார். அந்நிலையிலும் விசுவாசத்தில் தளர்ந்திடாமல், "என் ஐயா தினம் உன்னை நம்பி நான்," என்ற நம்பிக்கையூட்டும் பாடலை எழுதினார். இவ்வாறு தன் வாழ்வின் பிரச்சனை நேரத்தைக் கூட, ஆண்டவரின் ஊழிய வாய்ப்பாக மாற்றிக் கொண்டார்.

மரியான் உபதேசியார், ஸ்ரீவைகுண்டம், கிறிஸ்தியான் கோட்டை, ஏழாயிரம் பண்ணை, ஆகிய பல ஊர்களில் ஊழியம் செய்து முடித்து, பின்னர் தேவனின் பரம அழைப்பைப் பெற்று, ஏழாயிரம் பண்ணையில் அடக்கம் செய்யப்பட்டார்.

**பாடகர் குழு – C.S.I Tamil Church Oman (நன்றி: அமைதி நேர ஊழிய வெளியீடு)**

## பெண்கள் ஐக்கிய சங்க அறிக்கை – செப்டம்பர் 2019




இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தில் பாலைவன மன்னா வாசகர்கள் அனைவருக்கும் பெண்கள் ஐக்கிய சங்கத்தின் சார்பில் அன்பின் வாழ்த்துக்கள்.

செப்டம்பர் மாத பெண்கள் சங்கக் கூடுகை 19-ம் தேதி, C.S.I Malayalam hall-ல் வைத்து இரவு 9:10 மணிக்கு ஆரம்பமானது. ஆவிக்குரிய பாடல்கள் திருமதி. ஷைனி ஜோகன் அவர்களின் கீபோர்டு இசைகருவி வாசிப்புடன் உற்சாகமாக பாடப்பட்டது. அவர்களுக்கு பெண்கள் ஐக்கிய சங்கத்தின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆரம்ப ஜெபமாக திருமதி. சாரா ஜெயசிங், பெண்கள் சங்கத்தின் அங்கத்தினர் குடும்பங்களுக்காகவும், Sponsor செய்த குடும்பத்தினர்களுக்காகவும் ஜெபம் ஏறெடுத்தார்கள்.

பின்னர் திருமதி. பிரியதர்ஷினி கனகவேல் அவர்கள் ‘‘பெற்றோரும் பிள்ளைகளும்’’ என்ற தலைப்பில் தேவசெய்தியை கீழ்க்கண்ட குறிப்புகளில் வேத ஆதாரத்துடனும், அனுபவ எடுத்துக்காட்டுகளுடனும் பகிர்ந்தளித்தார்கள்.

1. பிள்ளைகளுக்காக நன்றி செலுத்துங்கள்.
2. பிள்ளைகளுக்காக ஜெபியுங்கள்.
3. பிள்ளைகளை நடத்துங்கள்.
4. பிள்ளைகளுக்கு நேரம் கொடுங்கள்.
5. பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுங்கள்.

தேவசெய்தி அனைவருக்கும் ஆசீர்வாதமாக இருந்தது. அவர்களுக்கு பெண்கள் சங்கத்தின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைத்தொடர்ந்து சில அறிவிப்புகள் பகிரப்பட்டு வரஇருக்கிற பெண்கள் சங்க ஆண்டு தேர்வுக்கு ஆயத்தமாக சில வினா விடைகள் விவாதிக்கப்பட்டது. பின்னர் சாட்சிவேளையில் சில சகோதரிகள் தங்கள் அனுபவ சாட்சிகளையும், ஜெபக்குறிப்புகளையும் பகிர்ந்தனர். அதன்பின் திருமதி. கோல்டன் ஐரின் ஷீஜா ராபின் அவர்கள் ஜெபக்குறிப்புகளைப் பகிர்ந்துகொள்ள, அந்த ஜெபக்குறிப்புகளுக்காக ஊக்கமான ஜெபம் ஏறெடுக்கப்பட்டது. பின்பு அவர்கள் நிறைவு ஜெபமாக சாட்சி சொன்னவர்களுக்காகவும், அவர்களின் ஜெபக்குறிப்புகளுக்காகவும் ஜெபித்து, பெண்கள் சங்கமானது 11:05 மணியளவில் இனிதே நிறைவுபெற்றது.

இறுதியில் Sponsor செய்த **Mrs. Golden Irene Sheeja Robin** மற்றும் **Mrs. Nisha Rajan** அவர்கள் சார்பில் சிற்றுண்டி வழங்கப்பட்டது. அவர்கள் குடும்பங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இனிவரும் நாட்களில் சபையின் பெண்களாகிய நாம் அனைவரும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு தேவஆசீர்வாதத்தைப் பெற்றுச் செல்லுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**அறிவிப்பு** : நமது பெண்கள் ஐக்கிய சங்கத்தின் ஆண்டுதேர்வு அக்டோபர் மாத பெண்கள் சங்கத்தில் நடக்கவிருக்கிறது. சபையின் பெண்கள் அனைவரும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

தேர்வு நாள் : 17, அக்டோபர், 2019
தேர்வு பகுதி : **மாற்கு சுவிசேஷம் முழுவதும்**
மனன பகுதி : **சங்கீதம் 112,113, மற்றும் 114 அதிகாரங்கள்**

**திருமதி. சாரா ராஜாசிங்**
**பெண்கள் ஐக்கிய சங்க செயலர்**

# ஆண்கள் ஐக்கிய சங்க அறிக்கை – செப்டம்பர் 2019




ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் பாலைவன மன்னா வாசகர்களுக்கு அன்பின் வாழ்த்துக்கள்.

ஆண்டவரின் மகா கிருபையால் நமது சபையின் ஆண்கள் சங்கமானது 19-09-2019 அன்று இரவு 9 மணிக்கு திரு. தன்ராஜ் அவர்கள் ஜெபத்துடன் ஆரம்பமானது.

பின்பு Bro. சைலஸ் சாலோமன் அவர்கள் பாடல்களைப் பாடினார்கள். அவர்களோடு சேர்ந்து சங்க உறுப்பினர்களும் சேர்ந்து ஆவிக்குரிய அனல் மூட்டும் பாடல்களை பாட அதற்கு அருமையான இசையை திரு. ராஜன் அவர்கள் வழங்கினார்கள். மிகவும் சிறப்பாக அமைந்தது. அதனை தொடர்ந்து சபைக்காகவும், இந்திய தேசத்திற்காகவும், தேவைகளுக்காகவும் ஜெபம் ஏறெடுக்கப்பட்டது.

Rev. James Pandian (மிஷனெரி) KRIYA Youth Mission, Mumbai அவர்கள் செய்தியை வழங்கினார்கள். யோவான் 14:5-12 வரை வாசிக்கப்பட்டு யோவான் 14:8-ம் வசனத்தை மையமாக வைத்து செய்தியை வழங்கினார்கள். பிலிப்பு பிதாவை எங்களுக்கு காண்பியும் என்று ஆண்டவரிடத்தில் கேட்டதுபோல அஸ்றப் என்ற முஸ்லீம் சகோதரர் ஈசா என்கின்ற இயேசுவைக் குறித்து விளக்கமளித்தபோது மனந்திரும்பி இன்று முழுநேர ஊழியராக ஊழியம் செய்கிறார். பிதா என்னை அனுப்பினதுபோல நானும் அனுப்புகிறேன், நாமும் அனுப்புவோம். இறுதியாக அவர்கள் ஜெபித்து கூட்டம் 11 மணிக்கு நிறைவடைந்தது. அனைவருக்கும் ஆசீர்வாதமாக அமைந்தது.

இசைமீட்டி, பாடல்களைப்பாடி, ஜெபித்து இக்கூடுகையை சிறப்பித்த அனைவருக்கும் ஆண்கள் சங்கத்தின் சார்பாக நன்றியைத் கூறிக்கொள்கிறேன். மேலும் இந்த மாதக் கூடுகையை தாங்கிய திரு. சுஜித் கிளாட்ஸன், திரு. வினோலின் ஆகியோருக்கும், உணவு வழங்கிய திரு. ராபின் தேவதாஸ் அவர்களுக்கும் ஆண்கள் சங்கத்தின் சார்பாக நன்றி கூறுகிறோம்.

தொடர்ந்து நமது திருச்சபையின் ஆண்கள் அனைவரும் ஆண்கள் ஐக்கிய சங்கத்தில் கலந்துகொண்டு தேவாசீர்வாதத்தைப் பெற்றுச்செல்ல அன்புடன் அழைக்கிறோம்.

**திரு. சைலஸ்**
**ஆண்கள் ஐக்கிய சங்க செயலர்**

# ஜெபிக்க சில குறிப்புகள்

**திருச்சபைக்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-**

- நமது திருச்சபை போதகருக்காகவும், குடும்பத்திற்காகவும், ஆரோக்கியத்திற்காகவும், திருப்பணிகளுக்காகவும் ஜெபிப்போம்.
- நமது திருச்சபையின் முன்னாள் குருவானவர்களுக்காகவும், அவர்கள் குடும்பங்களுக்காகவும், ஆரோக்கியத்திற்காகவும் ஜெபிப்போம்.
- நமது சபைக்கான போதகர் விசா விரைவில் கிடைப்பதற்காகவும் ஜெபிப்போம்.
- சபையின் நிர்வாக குழுவுக்காகவும், அவர்கள் தெய்வ பயத்தோடு திருச்சபையின் கடமைகளை நிறைவேற்றிடவும் ஜெபிப்போம்.
- திருச்சபையின் கிளைச்சங்கங்கள் சிறப்பாக செயல்பட, நல்ல வளர்ச்சி காண ஜெபிப்போம்.
- எல்லா ஆராதனைகளும் சிறப்பாய் நடைபெறவும், பங்கேற்போர் தேவாசீர்வாதம் பெறவும் ஜெபிப்போம்.
- திருச்சபைப் பணிகளை தன்னார்வமாய், உற்சாகமாய் தாங்கிவரும் அங்கத்தினர்களுக்காக ஜெபிப்போம்.
- பலர் நம்மோடு இணைந்து ஆண்டவரை ஆராதிக்கவும், திருச்சபை புதிய வளர்ச்சி பெறவும் கருத்தாய் ஜெபிப்போம்.
- இந்தியாவிலுள்ள நமது சொந்த திருச்சபைக்காகவும், பேராயங்களுக்காகவும், அதன் வளர்ச்சிக்காகவும், பேராயர், போதகர்கள் குடும்பத்திற்காகவும், திருப்பணி வளர்ச்சிக்காகவும் ஜெபிப்போம்.
- நமது பேராயத்தின் பேராயர் Rt. Rev. Dr. செல்லையா அவர்கள் இறைபணி மூலம், இறை சித்தம் நிறைவேற்றும் பேராயராய் செயல்பட்டு, பேராயம் நல்ல முறையில் இயங்கவும், இறையருள் வேண்டி மன்றாடுவோம்.
- நாம் தாங்கிவரும் 11 மிஷனெரிகளுக்காகவும், அவர்கள் தம் பணிக்களங்களில் செய்யும் அருட்பணிகளுக்காகவும், அவர்களது குடும்பங்களின் ஆசீர்வாதத்திற்காகவும் ஜெபிப்போம்.
- நமது தேசத்தில் நடைபெறும் எல்லா மிஷனெரி பணிகளுக்காகவும், பணித்தளங்களில் மிஷனெரிகள் சந்திக்கும் பிரச்சனைகளை அவர்கள் மேற்கொண்டு, தொடர்ந்து தைரியமாய் ஊழியம் செய்ய இறைபெலன் பெற்றுக்கொள்ள ஜெபிப்போம்.
- ஆலயங்கள் கட்டப்பட அனுமதி கிடைக்காமல் இருக்கிற திருச்சபைகளுக்காக கருத்தாய் ஜெபிப்போம்.

- வேதாகம சங்கத்தின் பணிகளுக்காக, தேவைகள் சந்திக்கப்பட ஜெபிப்போம்.
- தொழுகைகள் நடத்த இயலாமல் தடைபடுத்தும் மக்கள் இரட்சிக்கப்படவும் ஜெபிப்போம்.

## தேசத்திற்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

- தேசத்தலைவர்களுக்காகவும், அரசு அதிகாரிகளுக்காகவும், அதிகாரத்திலுள்ள அனைவரும் நேர்மையும் பயனுள்ள வகையிலும் ஆளுகைசெய்ய ஆண்டவரிடம் மன்றாடுவோம்.
- இன்றைய நம் நாட்டின் எல்லாத் துறைகளிலும் லஞ்சம் தலைவிரித்தாடுகிறது. இதனால் ஏழை எளிய மக்கள் அரசு சலுகைகளை, உரிமைகளைக்கூட சரிவர பெறமுடியாதச் சூழலில், ஊழல் என்னும் தீமை அகல ஆண்டவரிடம் மன்றாடுவோம்.
- மது என்னும் தீமை இன்றைய சமுதாயத்தையும், குடும்பத்தையும், தனிமனித வாழ்வையும் பெரிதும் பாதித்துவரும் சூழலில் தமிழகத்தில் பூரண மதுவிலக்கு கொண்டுவரப்பட ஆண்டவரை நோக்கி மன்றாடுவோம்.
- வாழ்வில் குறுக்கிடும் துன்பம், தோல்வி, நோய், கடன்பாரம் போன்றவைகளுக்கு தீர்வு தற்கொலையே என்கிற முடிவில் பலர் தங்களுக்கு ஆண்டவர் ஈவாக தந்த உயிரை தாங்களே அழித்து வருகின்றனர். குறிப்பாக இளம் தலைமுறையினரே அதிக எண்ணிக்கையில் தற்கொலை செய்துவரும் சூழலில், தற்கொலை என்னும் தீமை முழுமையாக அகல ஆண்டவரிடம் மன்றாடுவோம்.
- வேலையின்றி வாடுவோருக்கு வேலைவாய்ப்பினை ஏற்படுத்திக்கொடுக்க அரசு புதிய தொழில் நிறுவனங்கள் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள ஆண்டவரிடம் மன்றாடுவோம்.

## குடும்பங்களுக்காக ஜெபிக்க:-

- இந்த புதிய மாதத்தில் கர்த்தர் நம் ஒவ்வொருவரது குடும்பங்களையும் ஆசீர்வதிக்க ஜெபிப்போம்.
- சிறுகுழந்தைகள், சிறுவர்கள், வாலிபர்கள், பெற்றோர், முதியோர் என எல்லாரும் ஆண்டவரது கிருபை பெற்றிட ஜெபிப்போம்.
- வியாதி, கடன், வேலை இழப்பு, விசா பிரச்சனை, எதிர்பார்ப்புகள் நிறைவேறாமை, குழந்தையின்மை, வழக்குகள் இவற்றினால் கஷ்டபடுகிறவர்களுக்காக ஜெபிப்போம்.
- தீய பழக்கமுடையோரின் மனமாற்றத்துக்காக ஜெபிப்போம்.

- கருவுற்றிருக்கிற சகோதரிகள் ஆரோக்கியமாயிருக்கவும், ஏற்ற நாளில் நல்ல விடுதலைப் பெறவும் ஜெபிப்போம்.

## பெண்கள் பகுதி – திருமறை அறிவுப்போட்டி ~ 79

### அக்டோபர் 2019 மாத கேள்விகள்
### (சங்கீதம் 53 - 62 வரை)

1. கர்த்தர் எந்த வேளை தியானம்பண்ணும்போது சத்தத்தைக் கேட்பார்?
2. வானபரியந்தமும், மேகமண்டலங்கள் பரியந்தமும் எட்டுவது எவை?
3. எதைக் காணும்போது நீதிமான் மகிழுவான்?
4. பூமியின் கடையாந்தரங்களிலிருந்து எச்சூழலில் கூப்பிடுவேன் என்கிறார்?
5. தேவனைத் தொழுதுகொள்ளாதவர்கள் யார்?
6. தங்கள் ஆயுசு நாட்களின் பாதிவரை மட்டும் உயிர்வாழ்வது யார்?
7. ஐசுவரியம் விருத்தியானால் அதின்மீது வைக்கக்கூடாதது எது?
8. என் கண்ணீர் எங்கே வைக்கப்படும்?
9. தேவன் தம்முடைய ஜனத்தின் சிறையிருப்பைத் திருப்பும்போது உண்டாவது எது?
10. சத்தியத்தினிமித்தம் ஏற்றும்படி பயந்து நடக்கிறவர்களுக்கு கொடுக்கப்பட்டது எது?
11. ஜீவனைப் பார்க்கிலும் நல்லது எது?
12. மாயையிலும் லேசானவர்கள் யார்?
13. யாருக்கு தீமைக்குத் தீமை சரிக்கட்டப்படும்?
14. என் தலையின் பெலன் எது என்று கூறுகிறார்?
15. எதுவரை உமது செட்டைகளின் நிழலிலே வந்து அடைவேன்?
16. உதடுகளில் இருப்பது எது என தாவீது கூறுகிறார்?
17. எந்த நாளில் கர்த்தரை நம்புவேன் என சங்கீதக்காரன் குறிப்பிடுகிறார்?
18. கர்த்தர் யாரை ஒருபோதும் தள்ளாடஒட்டார்?
19. சர்ப்பத்தின் விஷத்திற்கு ஒப்பான விஷம் யாரிடம் உள்ளது?
20. பறந்துபோய் இளைப்பாறுவதற்கு தெரிந்துகொண்ட பறவை எது?

## செப்டம்பர் 2019 மாத திருமறை அறிவு போட்டிக்கான விடைகள்

1. கர்த்தரின் வெளிச்சமும், சத்தியமும் - சங். 43:3
2. இரட்சிப்பு – சங். 44:6
3. புழுதிமட்டும் - சங். 44:25
4. நீதியுள்ள செங்கோல் - சங். 45:6
5. ஓப்பீரின் தங்கம் - சங். 45:9
6. பூமி உருகிபோயிற்று – சங். 46:6
7. அமர்ந்திருக்கவேண்டும் - சங். 46:10
8. யாக்கோபின் - சங். 47:4
9. தேவன் - சங். 47:7
10. உயர்ந்த அடைக்கலமாக – சங். 48:3
11. கர்த்தரின் கிருபை – சங். 48:9
12. ஆத்துமாவை – சங். 49:15
13. அழிந்துபோகும் மிருகங்களுக்கு – சங். 49:20
14. மகிமைப்படுத்துதல் - சங். 50:15
15. இரட்சிப்பு – சங். 50:23
16. உண்மை – சங். 51:6
17. உதடுகளைத் திறந்தருளும் - சங். 51:15
18. நொறுங்குண்ட ஆவி – சங். 5:1-17
19. பலவான் - சங். 52:1
20. நீதிமான் - சங். 52:6,8

## செப்டம்பர் மாத திருமறை போட்டிக்கு சரியான விடை எழுதியவர்கள்

| | | |
|---|---|---|
| Mrs. Aspin Bejo | Mrs. Leela Gladson | Mrs. Sarah Rajasingh |
| Mrs. Boopathi Baskar | Mrs. Manju Martin | Mrs. Sathya Priya Ramesh |
| Mrs. Felsi Rani John | Mrs. Nisha Rajan | Mrs. Shabila Gnanadhas |
| Mrs. Golden Irene Sheeja Robin | Mrs. Percy Jean | Mrs. Shiney Johan |
| Mrs. Jancy Deepa Victor | Mrs. Priyadarsini Kanagavel | Mrs. Vanitha Rani Prince |
| Mrs. Jeya Rani Victor | Mrs. Regin Justa Vinolin | Mrs. Virgin Jegatha Jino |
| Mrs. Juslin Jaslin | Mrs. Sapthekha Jerry Sathya | |

# ஆண்கள் பகுதி – திருமறை அறிவுப்போட்டி ~ 64

## அக்டோபர் 2019 மாத கேள்விகள்
## (2 நாளாகமம் 1 முதல் 10 வரை)

1. ஊரியேலின் ஊர் எது?
2. ஓதேதின் குமாரனாகிய யார் மீது தேவனுடைய ஆவி இறங்கியது?
3. யோசபாத்துக்கு உதவியாக இருந்த சேனாபதி யார்?
4. வேஷமாறி யுத்தத்தில் பிரவேசித்த இஸ்ரவேலின் ராஜா யார்?
5. மிகாயா யாருடைய புத்திரன்?
6. தன் கால்களில் வியாதிகண்டு, யாருக்கு நோவு மிகவும் உக்கிரமாயிருந்தது?
7. மிகாயாவை கன்னத்தில் அடித்தது யார்?
8. யெகூ என்பவன் யார்?
9. யோசபாத்தின் தாய் யார்?
10. யூதா வம்சத்தின் தலைவனும், இஸ்மவேலின் குமாரனும் யார்?
11. யூதாவின் ராஜாவாகிய ரெகொபெயாம் யாருடைய குமாரன்?
12. ராஜாவாகிய ஆசா, மாகாள் உண்டுபண்ணின விக்கிரகத்தை எந்த ஆற்றங்கரையில் சுட்டெரித்துப் போட்டான்?
13. ரெகொபெயாம் எத்தனை வயதில் ராஜாவானான்?
14. யார் கொலை செய்யப்படவேண்டும்?
15. தொதாவின் குமாரன் எலியேசர் எந்த ஊரைச் சார்ந்தவன்?
16. பேலியாளின் மக்கள் யார்?
17. ரெகொபெயாம் ராஜாவாகி ஐந்தாம் வருஷத்தின் எகிப்தின் ராஜா யார்?
18. மாகாள் யாருடைய குமாரத்தி?
19. பலமுள்ளவனுக்காகிலும், பலனற்றவனுக்காகிலும் உதவிசெய்கிறது உமக்கு லேசான காரியம் என்று கூறியது யார்?
20. கர்த்தர் அடித்ததினால் மரணமடைந்தது யார்?

## செப்டம்பர் 2019 மாத திருமறை அறிவு போட்டிக்கான விடைகள்

1. 1. சாலொமோன் - 2நாளா. 1:7
2. 150 வெள்ளிக்காசுகள் - 2நாளா. 1:17
3. இருபதினாயிரம் - 2நாளா. 2:10
4. ஈராம் அபி – 2நாளா. 2:13
5. 2-ம் தேதி – 2நாளா. 3:1,2
6. 100 – 2நாளா. 3:16

7. கழுவுவதற்கு – 2நாளா. 4:6
8. 1 – 2நாளா. 4:15
9. 2 – 2நாளா. 5:10
10. மேகத்தால் - 2நாளா. 5:13 மகிமை
11. கரத்தினால் - 2நாளா. 6:4
12. பாவம் செய்யாத மனுஷன் - 2நாளா. 6:36
13. 8-ம் நாள் - 2நாளா. 7:9
14. தேசம் - 2நாளா. 7:20
15. சாலொமோன் - 2நாளா. 8:9
16. எசியோன்கேபேர், ஏலோத்து – 2நாளா. 8:17
17. சேபாவின் ராஜஸ்திரீ – 2நாளா. 9:7
18. சிங்கம் - 2நாளா. 9:18
19. ரெகோபெயாம் - 2நாளா. 10:1
20. கல்லெறிந்து – 2நாளா. 10:18

**செப்டம்பர் மாத திருமறை போட்டிக்கு சரியான விடை எழுதியவர்கள்**

| | | |
|---|---|---|
| Mr. Alex Baskar | Mr. Jean C. R. Shibin | Mr. Rajan V. N. |
| Mr. Anu | Mr. Jino John | Mr. Ramesh |
| Mr. Bejo Nelson | Mr. Johan Pratheep | Mr. Robin Devadhas |
| Mr. David Prabhakaran | Mr. Kanagavel | Mr. Sylus |
| Mr. Jaslin Sundara Kumar | Mr. Prince J. P. | |

## திருமறைப்பாடம் வாசிப்பவர்கள் ~ அக்டோபர் 2019

| | | |
|---|---|---|
| 04-10-2019 | முதலாம் திருமறைப்பகுதி | Mrs. Boopathy Baskar |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Mr. Jino John |
| 11-10-2019 | முதலாம் திருமறைப்பகுதி | Miss. Britny JenkinRaj |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Mr. Jino Retna Kumar |
| 18-10-2019 | முதலாம் திருமறைப்பகுதி | Mrs. Binita Pratheesh |
| | இரண்டாம் வேதபாடம் | Mr. Johan Pratheep |
| 25-10-2019 | முதலாம் திருமறைப்பகுதி | Bible School Student |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Bible School Student |
| 01-11-2019 | முதலாம் திருமறைப்பகுதி | Women's Fellowship |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Women's Fellowship |

# May God Bless All

## Birthday Celebrants – October 2019

| | |
|---|---|
| 01st October | Mr. Robert Dhas |
| 01st October | Mrs. Elisabeth, W/o Mr. Silas Jeya Sekar |
| 02nd october | Mrs. Maria Tracy, W/o Mr. Gnana Ruban |
| 03rd October | Miss. Josena Broose, D/o Mr. Jegan Broose |
| 05th October | Mrs. Mabel, W/o Mr. Nelson |
| 08th October | Miss. Jemima Joyce, D/o Mr. Paul Pratheeban |
| 11th October | Mr. Kanagavel |
| 11th October | Master. Jerrin John, S/o Mr. A. Rajasingh |
| 12th October | Mrs. Sumimol, W/o Mr. Vinobha |
| 13th October | Mr. R. Ramesh |
| 14th October | Miss. P. Shiny Percia, D/o Mr. Paul Pratheeban |
| 16th October | Mr. Jerry Sathya |
| 17th October | Mr. Bensam |
| 19th October | Mrs. Sarah, W/o Mr. Arumainayagam Rajasingh |
| 20th October | Mr. Lejo Salvin, S/o Mr. George |
| 21st October | Mr. Gladson, S/o Mr. David Sundersingh |
| 21st October | Mrs. Manju, W/o Mr. Justus Martin |
| 23rd October | Mrs. Vency Deepa, W/o Mr. S.Kannan |
| 24th October | Mrs. Vimala, W/o Mr. Selvamani |
| 28th October | Mrs. Ashika Sharon, W/o Mr. Joel |
| 30th October | Mr. Ajin |
| 31st October | Mrs. Ida Shanthi Priya, W/o Mr. P. Lenin |
| 31st October | Mrs. Sapthekha, W/o Mr. Jerry Sathya |

## Wedding Day Anniversaries – October 2019

| | |
|---|---|
| 22nd October | Mr. Ezhil Kumar & Mrs. Kiruba |
| 30th October | Mr. T. Raju & Mrs. Sujithra |

## இந்த மாத முக்கிய நிகழ்ச்சிகள்

| | |
|---|---|
| 01-10-2019 | செவ்வாய் - அருணோதய ஆராதனை<br>இடம் : மார்த்தோமா ஹால்/ அதிகாலை 5:00–6:00 |
| 03-10-2019 | வியாழன் – இரவு ஜெபக்கூடுகை<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால்/நேரம்: இரவு 9:00–11:00 |
| 04-10-2019 | வெள்ளி- பரிசுத்த நற்கருணை ஆராதனை<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால்/நேரம்: மாலை 4:45–6:45 |
| 05-10-2019 | சனி – திருமறைப்பள்ளி தியான முகாம்<br>இடம் : Hamriya Private Farm /நேரம்: காலை 9:30–3:00 |
| 11-10-2019 | வெள்ளி ஆராதனை<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால்/நேரம்: மாலை 4:45–6:45 |
| 12-10-2019 | சனி – உபவாச ஜெபக் கூட்டம்<br>இடம் : மார்த்தோமா ஹால் / காலை 10:30–1:00 |
| 17-10-2019 | வியாழன் - பெண்கள் ஐக்கிய சங்க கூடுகை<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால்/நேரம்: இரவு 9:00–11:00 |
| 17-10-2019 | வியாழன் - ஆண்கள் ஐக்கிய சங்க கூடுகை<br>இடம் : மார்த்தோமா ஹால் / நேரம்: இரவு 9:00–11:00 |
| 18-10-2019 | வெள்ளி - பரிசுத்த நற்கருணை ஆராதனை<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால்/நேரம்: மாலை 4:45–6:45 |
| 25-10-2019 | வெள்ளி – அகில உலக திருமறைப்பள்ளி ஆராதனை<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால்/நேரம்: மாலை 4:45–6:45 |
| 01-11-2019 | வெள்ளி – பெண்கள் சங்க சிறப்புத் தொழுகை<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால்/நேரம்: மாலை 4:45–6:45 |

**Details of final settlement given to Rev. Gladston**

| Description | Amount |
|---|---|
| Gratuity - 2015 to 2019 | 744.400 |
| Leave Salary | 309.400 |
| Agreed Family Ticket fare | 390.000 |
| May month salary | 406.000 |
| PF for the month of May | 46.000 |
| **Total** | **1,895.800** |

# அனுதின மன்னா – அக்டோபர் 2019


ஒவ்வொரு நாளும் வாசிக்கிறதற்காக ஒரு திருமறைப்பகுதி தரப்பட்டுள்ளது. வாசித்து, தியானித்து குடும்ப ஜெபத்தில் பயன்படுத்துங்கள். ஓராண்டில் திருமறைப்பகுதியை தனி ஜெபத்தில் தியானித்து பயனடையுங்கள்.

| தேதி | நாள் | திருமறைப் பாடம் | அனுதின மன்னா | ஓராண்டில் திருமறை |
|---|---|---|---|---|
| அக்டோபர் 1 | செவ்வாய் | லேவி. 25:8-12 | லேவி. 25:19 | மத்தேயு 18-20 |
| அக்டோபர் 2 | புதன் | மத். 19:16-24 | மத். 19:21 | மத்தேயு 21-22 |
| அக்டோபர் 3 | வியாழன் | சங். 36:1-12 | சங். 36:8 | மத்தேயு 23-24 |
| **அக்டோபர் 4** | **வெள்ளி** | **யோவா. 2:1-11** | **யோவா. 2:5** | **மத்தேயு 25-26** |
| அக்டோபர் 5 | சனி | உபா. 6:10-15 | உபா. 6:12 | மத்தேயு 27-28 |
| அக்டோபர் 6 | ஞாயிறு | உபா. 26:12-19 | உபா. 26:12 | மாற்கு 1-3 |
| அக்டோபர் 7 | திங்கள் | உபா. 30:1-10 | உபா. 30:9 | மாற்கு 4-6 |
| அக்டோபர் 8 | செவ்வாய் | சங். 103:1-10 | சங். 103:5 | மாற்கு 7-9 |
| அக்டோபர் 9 | புதன் | நீதி. 19:20-29 | நீதி. 19:23 | மாற்கு 10-13 |
| அக்டோபர் 10 | வியாழன் | யோவே. 2:18-27 | யோவே. 2:26 | மாற்கு 14-16 |
| **அக்டோபர் 11** | **வெள்ளி** | **மத். 6:25-34** | **மத். 6:33** | **லூக்கா 1** |
| அக்டோபர் 12 | சனி | யோவா. 15:1-11 | யோவா. 15:11 | லூக்கா 2-3 |
| அக்டோபர் 13 | ஞாயிறு | 2கொரி. 9:1-12 | 2கொரி. 9:12 | லூக்கா 4-5 |
| அக்டோபர் 14 | திங்கள் | கொலோ. 2:6-15 | கொலோ. 2:10 | லூக்கா 6-7 |
| அக்டோபர் 15 | செவ்வாய் | கொலோ. 2:6-15 | கொலோ. 2:7 | லூக்கா 8-9 |
| அக்டோபர் 16 | புதன் | 1தீமோ. 6:1-10 | 1தீமோ. 6:6 | லூக்கா 10-11 |
| அக்டோபர் 17 | வியாழன் | எபி. 2:5-18 | எபி. 2:10 | லூக்கா 12-13 |
| **அக்டோபர் 18** | **வெள்ளி** | **யோவா. 6:66-71** | **யோவா. 6:68** | **லூக்கா 14-16** |
| அக்டோபர் 19 | சனி | யாக். 1:1-8 | யாக். 1:4 | லூக்கா 17-18 |
| அக்டோபர் 20 | ஞாயிறு | லூக். 11:5-13 | லூக் 11:9 | லூக்கா 19-20 |
| அக்டோபர் 21 | திங்கள் | யோவா. 10:1-11 | யோவா. 10:9 | லூக்கா 21-22 |
| அக்டோபர் 22 | செவ்வாய் | உபா. 5:22-32 | உபா. 5:33 | லூக்கா 23-24 |
| அக்டோபர் 23 | புதன் | கலா. 3:1-16 | கலா. 3:9 | யோவான் 1-3 |
| அக்டோபர் 24 | வியாழன் | எபே. 1:1-14 | எபே. 1:7 | யோவான் 4-5 |
| **அக்டோபர் 25** | **வெள்ளி** | **1சாமு. 1:1-20** | **1சாமு. 1:18** | **யோவான் 6-7** |
| அக்டோபர் 26 | சனி | 1இரா. 17:1-14 | 1இரா. 17:14 | யோவான் 8-9 |
| அக்டோபர் 27 | ஞாயிறு | லூக். 18:9-14 | லூக். 18:14 | யோவான் 10-11 |
| அக்டோபர் 28 | திங்கள் | ஏசாயா 35:1-10 | ஏசாயா 35:10 | யோவான் 12-13 |

| தேதி | நாள் | திருமறைப் பாடம் | அனுதின மன்னா | ஓராண்டில் திருமறை |
|---|---|---|---|---|
| அக்டோபர் 29 | செவ்வாய் | சங். 37:1-13 | சங். 37:11 | யோவான் 14-15 |
| அக்டோபர் 30 | புதன் | நீதி 28:13-23 | நீதி. 28:20 | யோவான் 16-17 |
| அக்டோபர் 31 | வியாழன் | 1யோ. 2:15-29 | 1யோ. 2:25 | யோவான் 18:19 |
| **நவம்பர் 1** | **வெள்ளி** | **ஆதி. 6:9-12** | **ஆதி. 6:18** | **யோவான் 20-21** |

## நிகழ்வும் - பாடமும்

1. Spiritual Maturity is when **you stop trying to change others …instead focus on changing yourself.**
2. Spiritual Maturity is when **you accept people as they are.**
3. Spiritual Maturity is when **you understand everyone is right in their own perspective.**




4. Spiritual Maturity is when **you learn to "let go".**
5. Spiritual Maturity is when **you are able to drop "expectations" from a relationship and give for the sake of giving.**
6. Spiritual Maturity is when **you understand whatever you do, you do for your own peace.**
7. Spiritual Maturity is when **you stop proving to the world, how intelligent you are.**
8. Spiritual Maturity is when **you don't seek approval from others.**
9. Spiritual Maturity is when **you stop comparing with others.**
10. Spiritual Maturity is when **you are at peace with yourself.**
11. Spiritual Maturity is when **you are able to differentiate between "need" and "want" and are able to let go of your wants**.

    & last but most meaningful!
12. You gain Spiritual Maturity when **you stop attaching "happiness" to material things !!**

"Wishing all a Happy Spiritually Matured Life."

# ஆராதனை ஒழுங்குகள்

| | |
|---|---|
| பிரதி மாதம் முதல் தேதி | அருணோதய ஆராதனை<br>நேரம் : அதிகாலை 5:00 – 6:00<br>இடம் : மார்த்தோமா ஹால் |
| முதல் மற்றும் மூன்றாம் வெள்ளி | பரிசுத்த நற்கருணை ஆராதனை<br>நேரம் : மாலை 4:45 – 6:45<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால் |
| இரண்டு, நான்கு மற்றும் ஐந்தாம் வெள்ளி | மாலை ஆராதனை<br>நேரம் : மாலை 4:45 – 6:45<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால் |
| முதல் வியாழன் | இரவு ஜெபக் கூடுகை<br>நேரம் : இரவு 9:00 – 11:00<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால் |
| இரண்டாம் சனி | உபவாச ஜெபக் கூடுகை<br>நேரம் : காலை 10:30 – 1:00 |
| மூன்றாம் வியாழன் | பெண்கள் ஐக்கிய சங்க கூடுகை<br>நேரம் : இரவு 9:00 – 11:00<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால் |
| மூன்றாம் வியாழன் | ஆண்கள் ஐக்கிய சங்க கூடுகை<br>நேரம் : இரவு 9:00 – 11:00<br>இடம் : மார்த்தோமா ஹால் |

திருமறை பள்ளி வகுப்புகள் - எல்லா வெள்ளிக்கிழமைகளிலும் மாலை 4:45 முதல் 5:45 மணி வரை நடைபெறும்.

பாடகர் குழு பயிற்சி - எல்லா வெள்ளிக்கிழமைகளிலும் மாலை 7:00 முதல் 8:00 மணி வரை நடைபெறும்


**Contact: Rev. Dr. N. Jesin**

**GSM : 9693 3489**
**Land Line : 2470 5784**
**E-mail : csitco@gmail.com**
**www.csitamilchurchoman.org**



**(For Private Circulation Only)**